

# அமெரிக்காவில் ஒபாமாவின் புரட்சி

மாட்டுத் தொழுவத்தில் அவதரித்து மானுட மக்கள் நலம் பேண, தன் இரத்தம் சிந்தச்சிந்த சிலுவையிலே அறையப்பட்டாலும் மனம் கலங்காது மக்களுக்காக உயிர்நீத்தார் **இயேசுநாதர்.**

மக்களிடமிருந்து ஓட ஓட விரட்டப்பட்டு கல்லால் அடிபட்டாலும் சத்திய வாழ்க்கைக்கெனத் தியாகத் தழும்புகள் பெற்றார் **முகமது நபிகள்.**

நாசிப்படைகளின் நாச விளையாட்டை நசுக்கி ஜெர்மானிய தளங்களை சுக்கு நூறாக்கி தூக்குக்கயிற்றை முத்தமிட்டு ரஷ்யா உள்ளளவும் அழியாச் சின்னமாகக் காட்சி தரும் **டான்வியா-ரஷ்யா நாட்டின் அழியாத வரலாறு.**

சீனாவிற்கும், ஜப்பானிற்கும் மூண்ட யுத்தக் களத்தில் தாக்குப்பிடிக்காது பின்வாங்கிய சீன

ராணுவம் - பச்சிளம் குழந்தைகளைக் கூட உடன் கொண்டு செல்ல முடியாத நிலையில் அநாதைக் குழந்தையாக தவித்த **மாசேதுங்** தான் சீன நாட்டின் **விடுதலை வீரர்; சீனநாட்டின் விடுதலைக்கோர் எடுத்துக்காட்டு.**

1789ல் அரண்மனை அதிகாரங்களையும், அநீதிகளையும் தகர்த்தெறியத் தன் புரட்சிக் கருத்துக்களை மக்களின் ரத்தத்தில் கலக்க வைத்த **வால்டேர் - பிரஞ்சுப் புரட்சியின் அடித்தளம்.**

அமெரிக்க நாட்டில் 1821ல் டிரஸ்டன் நகரத்துச் சந்தையில் கிழிந்த ஆடை, நலிந்த உடலுடன் சுமக்க முடியாத விறகுக் கட்டை களுடன் கூடியிருந்த கறுப்பின பெண்களுக்கு ஏற்பட்ட சோதனைகள், அவமானங்களைக் கண்டு அடிமைகளின் விலங்கறுக்க சபதம் மேற்கொண்டு அமெரிக்க ஜனாதிபதியாகி 1863ல் தன் லட்சியத்தை அடைந்த அகிலம்புகழ் **ஆப்ரகாம் லிங்கன்.**

நிறவெறியை எதிர்த்து - ஆப்பிரிக்க நாட்டில் வெள்ளையர் களின் ஆதிக்கத்தை எதிர்த்த இந்தியாவின் விடுதலைத் தந்தை **மகாத்மா காந்தி.**

மகாத்மா காந்தியின் வழியில் தென்னாப்பிரிக்க நாட்டில் ரப்பென் தனிமைச் சிறையில் நிற வெறியை எதிர்த்து 27 ஆண்டுகள் சித்திரவதை பெற்ற **நெல்சன் மண்டேலா - ஆப்பிரிக்க மக்களின் எழுச்சி நாயகன்.**

கத்தியின்றி, ரத்தமின்றி அமெரிக்காவில் வாழும் கறுப்பின மக்களின் விடுதலைக்காகவும், சமூக நீதிக் கொள்கைகளுக்காகவும் பாடுபட்டு துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையான **மார்ட்டின் லூதர்கிங்.**

நாட்டிற்காக நீ என்ன செய்தாய் என அமெரிக்க மக்களை எழுச்சி கொள்ளச்செய்து ஒன்றுபட்ட அமெரிக்காவாக உருவாக்கிட பாடுபட்ட அமெரிக்க அதிபர் இளைஞர்களின் எழுச்சியாளர் **ஜான் எஃப் கென்னடி.**

முதல் உலகப் போரைத் தன்னுடைய சாதுர்யத்தால் முடிவுக்குக் கொண்டு வந்த அமெரிக்க ஜனாதிபதி **உட்ரோ வில்சன்.**

ஏன்? எதற்கு? எப்படி? - என எதையும் ஆராயாமல் ஏற்கக் கூடாதென்கிற உயரிய அழியா அறிவுப்பூர்வ தத்துவங்களை வழங்கி இளைஞர்களின் எழுச்சிக்கு வித்திட்ட **சாக்ரடீஸ்.**

இப்படி வரலாற்றில் கிருஸ்துவிற்கு முன்பும், கிருஸ்துவிற்கு பின்பும் உலகத்திலுள்ள ஒவ்வொரு நாட்டிலும், ஒவ்வொரு நூற்றாண்டிலும் தோன்றிய மாபெரும் தலைவர்கள், வாழும் வழிகாட்டிகளாக நல்லதொரு சமுதாயத்தை உருவாக்கிடப் பெரும் தியாகத் தழும்பேற்று, நீதி, நியாயம், உண்மை - சத்தியம் வழி வாழ்ந்து, வரலாற்றைப் படைத்து வரலாற்றில் வாழ்வாங்கு வாழ்பவர்கள், வழித்தோன்றல்கள் ஒரு சிலரே, அந்த ஒரு சிலரின் வழிகாட்டலின் வழி நடந்து, புதிய வரலாறு படைத்து, புதியதோர் சகாப்தம் உருவாக்கிவரும் ஒபாமா, அமெரிக்க அதிபராக ஆப்பிரிக்க-அமெரிக்க மக்களின் வாழ்வியலில் ஒரு திருப்பு முனையாகத் திகழ்கிறார். ஒடுக்கப்பட்ட இனத்தின் மாபெரும் செயலாற்றல் கொண்டவராக ஒபாமா விளங்குகிறார்.

அமெரிக்க அதிபர்கள் கோலோச்சும் மாளிகையான வெள்ளை மாளிகை ஒபாமாவின் முன்னோர்களின் (நீக்ரோ மக்களின்) உழைப்பால், வேர்வையே ரத்தமாகப்பிழியப்பட்டு, கசையடிகளைக் கட்டாயக் காணிக்கையாய்ப் பெற்று அக்கறுப்பின மக்களால் தான் ஓங்கி உயர்ந்து நிற்கிறது. அத்தகைய இன்றைய வெள்ளை மாளிகையில் - 2009 வரை வெள்ளையர்கள் ஆக்கிரமித்து வந்த மாளிகையில் - வெள்ளையர்களே அதிபர்களாக ஆட்சி செய்த மாளிகையில் கறுப்பினத்தின் காரிருள் போக்க வந்த கறுப்புநிலா, தன் முன்னோர்கள் உருவாக்கிய மாளிகையில் முன்னோரின் சந்ததியாக, அமெரிக்க நாட்டின் அதிபராக ஆட்சி செலுத்துவதை அகில உலகமே தன் விழியோரப் புருவங்களை வில்லாக வளைத்துக் காண்கிறது. கறுப்பின மக்களின் எழுச்சி நாயகனாக வரலாறு படைத்துக் கொண்டிருக்கிறார் **ஒபாமா!**

***தென்னாப்பிரிக்காவில் உள்ள கிம்பெர்லி நகரத்து வைரச் சுரங்கத்தில் வெட்டியெடுக்கப்பட்ட வைரம் போல்,***

***தென்னாப்பிரிக்காவின் ஜோகன்ஸ் பர்க்கில் உள்ள தங்கச் சுரங்கம் ஜொலிப்பது போல்***

அமெரிக்க நாட்டில் கசையடிபட்டு கொத்துக் கொத்தாக விற்கப்பட்ட அடிமை இனத்தின் விடிவெள்ளி ஒன்று 1961-ம் ஆண்டில் உதயமாயிற்று. அதுதான் கறுப்பர்களின் முழு நிலவாய் இன்று மிளிர்ந்து ஒளிரும் ஒபாமா.

'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் - யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்கிற முதுமொழிகளுக்கேற்ப சமதர்ம சமத்துவ வழித் தோன்றலாக 1961ல் ஆகஸ்ட்டில் பராக் ஹுசேன் ஒபாமா - ஸ்டான்லி ஆன் டன்ஹம் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார் ஒபாமா.

தன் இளம் வயது முதல் ஆண்கள், பெண்கள் என வித்தியாசமின்றி அமெரிக்க நாட்டின் டிரெஸ்டன் என்கிற சேரிப்பகுதியில் கறுப்பின மக்களின் துன்பங்களைக் கண்ட ஆப்ரகாம் லிங்கன் காலம் முதல், வெள்ளை மாளிகையின் "**வெண்மை**" உள்ளத்துச் சொந்தக்காரர் கென்னடி வரையிலும் இருவருக்கும் இடைப்பட்ட காலத்தில் தோன்றிய நிறவெறிக்கு எதிரான தலைவர்கள் உட்பட அனைவர் காலத்திலும் கறுப்பு நிறம் என்பது பலர் கண்களை உறுத்தவே செய்தது.

1831ல் நாட்டர்னர் என்கிற கறுப்பின வாலிபன் நிற வெறியர்களின் அட்டுழியத்தை ஒழிக்கப் போர்ப்பரணி பாடி வெள்ளையர்களை எதிர்த்தார். அந்தக் கறுப்பின வாலிபன் கசையடிபட்டு தூக்கிலே தொங்கவிடப்பட்டான். நாட்டர்னர் கொல்லப்பட்டபின் வெள்ளையர்கள் மனதில் மூண்டுவிட்ட பழிவாங்கும் எண்ணம் அவர்களிடம் பன்மடங்காகியது. ஆனால், நாட்டர்னரின் மரணம் ஓரளவு கறுப்பின மக்களை விழிப்படையச் செய்தது.

நாட் டர்னரின் எழுச்சிக்குப் பின்னால் அடிமை முறை மற்றும் நிறவெறியை ஒழித்து சமதர்ம சமத்துவம் என்கிற வரலாறு படைக்கப் புறப்பட்ட அகிலம் புகழ் ஆப்ரகாம் லிங்கன் நாடக அரங்கமொன்றில் கொடியவன் ஒருவனால் சுட்டு வீழ்த்தப்பட்டார்.

நீக்ரோக்களின் உரிமைக்காக கிளர்ச்சிகள் செய்து, வெற்றிகரமான புரட்சியைத் தோற்றுவித்த நீக்ரோ தலைவர் மார்டின் லூதர்கிங் பழிவாங்கப்பட்டார்.

வெள்ளை மாளிகையில் நிறத்தின் பெயரால் புகுந்துள்ள புற்றரவை ஒழித்துக் கட்டவும், அநீதிக்கு சமாதிகட்டவும் சமதர்ம ஜனநாயகம் காக்கப் புறப்பட்ட ஜான் எப் கென்னடியை பக்கத்திலிருந்த மனைவி ஜாக்குலின் பதைபதைக்க, பதற பதற, துடிதுடிக்க கொடியோர் சுட்டுக் கொன்றனர். இறப்பால் புகழ்பெற்றார் ஜான் எப். கென்னடி.

1781ம் ஆண்டு 132 நீக்ரோக்களை எந்தவித கேள்வியும் இல்லாமல் கடலில் தூக்கியெறிந்தனர் வெள்ளையர்கள். ஆடுமாடுகளைப் போல் பண்ணைகளில் அடைக்கப்பட்டு அடிமை வேலைக்காகவே ஆண்டவனால் படைக்கப்பட்டதாகக் கருதப்பட்ட இனம், காட்டு மிருகங்களை விட கேவலமாக வேட்டையாடப்பட்ட இனம், சதைகள் பிய்யும் வரை சவுக்கடிப்பட்ட இனம், வெட்ட வெளியில் மரக்கிளைகளில் தலைகீழாகத் தொங்கவிடப்பட்ட இனம், எள்ளி நகையாடப்பட்ட இனம், ஏளனத்திற்குட்பட்ட இனம் - பெண்டிர் எனக்கூட நினைக்காமல் அவர்களை அலங்கோலமாக, அருவருக்கத்தக்க வகையில் நடத்தினர் கறுப்பு உள்ளத்து வெள்ளை வெறியர்கள்.

இப்படியெல்லாம் துன்பப்பட்டு, துயரப்பட்டு, அடிமைகளாக-அமெரிக்க நாட்டு வீதிகளில் உலாவருவதற்கு மறுக்கப்பட்ட இனம், ஒரு காலத்தில் - ஆனால் இன்று உலகமே வியக்கும் வகையில் முதல் முதலாக மட்டுமல்லாமல் இரண்டாம் முறையாகவும் - தன் முன்னோர்கள் துன்பப்பட்டு துயரப்பட்டு அடிமைப்பட்டு வெள்ளையர்களின் கட்டளைக்கும், கசையடிகளுக்கும் கட்டாயமாக ஆட்பட்டுத் தங்களின் தேக்கு மரத் தேகங்களின் உழைப்பினால் கட்டப்பட்ட வெள்ளை மாளிகையில் - தன் மூதாதையர்கள் உருவாக்கிய **வெள்ளை மாளிகையில் அதிபராக, உலகத்து வரலாற்றில் அமெரிக்காவின் "அடையாளம்"** ஒபாமா என்றளவில் வெள்ளை மாளிகை மன்னராக வீற்றிருக்கிறார். பதவியேற்றதற்கு

முன்னும் பின்னும் நடந்தேறிய வரலாற்றுச் சம்பவங்களையும், அறிஞர்கள், எழுத்தாளர்கள், அரசியல்வாதிகள், ஆக்கப்பூர்வ விஞ்ஞானிகள், பொருளாதார மேதைகள், வரலாற்று வல்லுனர்கள்- இப்படி கல்வி, கலை, இலக்கியம் என பலதரப்பட்ட வித்தகர்களின் சான்றிதழ்களுடன் இங்கே காட்சிதரப் போகும் - இந்த வெள்ளை மாளிகையை ஒளிர வைத்துக் கொண்டிருக்கும் கறுப்புநிலாவின் அருமை பெருமைகளையும் ஆக்கப்பூர்வமான செயல்பாடுகளையும் வரலாற்று சான்றுகளுடன் விளக்கி ஒபாமா அமெரிக்க நாட்டின் வரலாற்றின் அடையாளம் எப்படி என்பதை அறிய பின்வரும் பக்கங்களைப் புரட்டிப் பார்ப்போம்.

❖

**ஆப்ரகாம் லிங்கன், மார்ட்டின் லூதர்கிங், கென்னடி** போன்ற தலைவர்களின் நிறவெறி எதிர்ப்புக் கொள்கைக்குக் கிடைத்த வெற்றி ஒபாமாவின் வெற்றி மட்டுமல்ல - மிசிசிப்பி மாநிலத் தின் வரலாற்றுச் சின்னமாக JOHN DUPREE என்கிற கறுப்பினத்தைச் சேர்ந்த ஒருவன் முதன் முதலாக அம்மாநிலத்திலிருந்து மேயராகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார். ஹட்டிங் பார்க்கிலிருந்து தேர்வு செய்யப்பட்ட அவர் கூறுகிறார்: "மக்கள் எங்களை நம்புவதைப் பெருமையாக நினைக்கிறோம். உண்மையை நம்புகிறார்கள். நாங்கள் செய்ய இருக்கும் காரியங்களையும், எங்கள் எண்ணங்களையும், முயற்சிகளையும் நம்பும் மக்களின் பெருமைகளையும் நம்பிக்கையையும், பெற்றுக்கொள்கிறோம்" என கூறியிருப்பதே இரண்டாம் முறையாக ஒபாமாவின் வெற்றிக்கு வழிவகுத்தது என்பதை 2011ல் ஆகஸ்ட் 24ம் நாளில் MORNING REPORT என்கிற புகழ்பெற்ற பத்திரிகையின் மூலம் அறிய முடிகிறது.

"I am just proud of the fact that we had people who believed in us, believed in the message, believed in what are trying to accomplish, I am so, proud that people took a had of that."

• 45வது ஆதிபராகப் பதவியேற்ற ஒபாமா தன் பதவி கால பயணத்தை our journey is not complete என தொடர்ந்து கொண்டிருக்கிறார். புரட்டப்படும் ஒவ்வொரு பக்கத்திலும் அவரது முத்திரைகளைக் காண்போம். ஒபாமாவின் அரசியல் பயணத்தோடு நாமும் பயணிப்போம்.

கென்யாவின் கறுப்பருக்கும், அமெரிக்க சான்சாய் நகர வெள்ளை மாதுவுக்கும் மகனாகப் பிறந்து உலகம் புகழும் சாதனைகளை வரலாற்றில் பதித்துள்ள - பதிக்கவுள்ள நம்பிக்கை நாயகன் **ஒபாமாவின் கதை.**

2005ம் ஆண்டு Capital Grounds to the Library Congress என அழைக்கப்படும் மண்டபத்தில் கறுப்பினத்தைச் சேர்ந்த ஒபாமா அமெரிக்க நாட்டில் முதன்முதலாக செனட்டராகப் பதவியேற்கும் நிகழ்ச்சிக்கும் அதைத் தொடர்ந்து நடக்கவிருக்கும் விருந்திற்கும் மனைவி மிசேல், ஒபாமாவின் தங்கை மாயா, மைத்துனர் மற்றும் இல்லினாய்ஸ் மக்கள், தொழிலதிபர்கள் முக்கிய பிரமுகர்கள், அரசு அதிகாரிகளென சுற்றம் சூழ கலந்து கொண்டனர். தன் ஆறு வயதுக் குழந்தையுடன் மனைவி மிசேல் ஒபாமாவின் கரங்களைப் பிடித்து முத்தமிட்டவாறு "**வாழ்த்துக்கள் திருவாளர் செனட்டர் அவர்களே**" எனப் புன்னகை ததும்ப வாழ்த்துக்கூற, ஒபாமாவும் தனக்கேயுரிய புன்னகையுடன் "**வாழ்த்துக்கள் மேடம் செனட்டர்**" என இருவரும் தங்கள் வாழ்த்துகளைப் பகிர்ந்து கொண்டனர். அந்த இனிய காட்சிகளை ஊடகத்தார்கள், நிருபர்கள் படமெடுத்து செய்திகளைச் சேகரித்துக் கொண்டிருந்தனர். பார்த்துக் கொண்டிருந்த மக்கள் வாழ்த்தொலி வழங்கினர்.

ஒபாமாவோ நிருபர்களோ யாரும் எதிர்பாரா நிலையில் ஒபாமாவின் இளந்தளிர் "அப்பா நீங்கள் பிரசிடெண்ட் ஆகப் போகிறீர்களா?" எனக் கள்ளம் கபடமின்றி கேட்ட கேள்வி மண்டபத்தில் உள்ள அனைவரையும் திகைப்படையச் செய்தது. அப்போது ஒபாமா புரிந்த புன்னகையின் அர்த்தம் புரியாமல் நிருபர்களும் மற்றவர்களும்

சிந்தனையிட் ஆழ்ந்தனர். அந்தப் புன்னகையிலிருந்த ஆழமான அர்த்தத்தைப் புரிந்து கொண்ட அவரது உதவியாளர் **ராபட் கிப்ஸ்** மகள் மாலியாவின் கேள்வியை அனைத்து நிருபர்களும் அறியும்படி செய்து, பத்திரிகைகளில் வருமளவிற்குத் தன் காரியத்தைக் கச்சிதமாகச் செய்து முடித்தார். இதுவே அமெரிக்க வரலாற்றில் புதியதொரு அத்தியாயத்தைத் தொடங்க அடிகோலியது.

அரசியலில் இறங்கி அரிய பெரிய சாதனைகள் செய்து வெற்றியடைய வேண்டுமென நினைப்பவர்கள் அனைவரும் வெற்றி பெற்றவர்கள் அல்ல. அரசியலில் ஆழம் தெரியாமல் காலைவிட்டு அதளபாதாளத்தில் விழுந்து அழிந்தவர் பலர். தான் கொண்ட கொள்கையில் இருவேறுபட்ட கருத்துக்களுக்கும், எண்ணங்களுக்கும், செயல்பாடுகளுக்கும், சிறிதும் நினைப்பில் இடமளிக்காத தூய உள்ளத்தோடு தியாக சிந்தனைகள் மூலமே அரசியலில் அரும்பெரும் சாதனைகள் செய்து வெற்றி பெறமுடியும். ஏன் வரலாற்றிலும் வலம் வரலாம். “Give voice to the voiceless and power to the powerless” என்கிற கருத்தாழமுள்ள வார்த்தைக்குச் சொந்தக் காரர் ஒபாமா. ஒபாமாவின் வழிகாட்டிகளாகப் போற்றப்படுபவர்கள் மூவர் - **அகிலம் புகழும் ஆப்ரகாம் லிங்கன், மகாத்மாகாந்தி, மார்ட்டின் லூதர்கிங்**, இவர்களின் அடியொற்றி தன் வாழ்வில் சாதனைகளைப் புரிந்து சரித்திரம் படைக்க வேண்டுமென்ற எண்ணத்தைச் சிறுவயது முதலே தன் ஆழ் மனதில் பதிய வைத்துக் கொண்டார். அதற்கு அவரது தாய்தான் காரணம்.

''சிந்தனையில் தெளிவும், செயல்பாட்டில் துணிவும், கடமையில் பொறுப்பும், கருத்தாராய்வதில் பொறுமையும் கொண்டு, நான் செய்கின்ற நற்காரியங்களுக்கு ஆதரவும், என் மீது ஆசையும், அன்பும் செலுத்தி, அறிவு புகட்டவும் செய்வதில் என் தாய்க்கு நிகர் யாருமில்லை! பிறர் குறைகண்டு ஏளனமும், கேலியும் கூடாதெனவும், பிறர் பற்றி மற்றவரிடத்தில் தவறாகப் பேசக்கூடாது எனவும் மாற்றாரிடம் மதிப்பும் மரியாதையும் கொண்டிருக்க வேண்டுமெனவும் இப்படி பலபல உயர்ந்த எண்ணங்களை என்னிடம் வளர்த்தார். பிறருக்கு உதவும் நற்பண்புகளை என் உள்ளத்தில் வளர்த்தார். “I know that she was the kindest, most generous spirit I have ever known, and that what is

best in me I love to her." நான் பெற்றிருக்கும் நற்குணங்கள் எல்லாம் என் தாய் வழங்கியது" என தன் தாயின் தாக்கத்தைக் தெளிவாகவே தன் சுயசரிதையில் காட்டியுள்ளார். "When I was in college I decided & wanted to be part of beginning about social changer in this country."

ஒபாமாவின் தாயின் முழுப்பெயர் ஸ்டான்லி ஆன் டன்ஹாம். இறுதி வரை அவர் ஆன் என்றே அழைக்கப் பெற்றார். ஒபாமாவின் தாயைப் பற்றி அவரது தாத்தா மேட்லின் டன்ஹாம் கூறுகிறார். ''என் மகள் 16 வயதில் மிக அழகாக இருப்பாள். இளமைப் பருவத்திற்கேற்ற அழகானவளாக இருந்தாள். முற்போக்கு சிந்தனையும், அதீத புத்திசாலித்தனமும், படிப்பில் கெட்டிக்காரியாக வும், உயர்ந்த தத்துவ ஞானிகளின் அறிவுரைகளை, வேற்று நாட்டு நாகரிகங்களை, கற்றுணர்ந்து தன் 16 வயதில் இலக்கியத்தில் தேர்ச்சி பெற்றவளாகவும் விளங்கினாள்'' எனக் கூறியிருக்கிறார்.

"She was extermely brilliant, she read a lot, a very great deal at a very young age. She was into all of these philosophers by the time of her sixteen. She loved to read and collect".

1930களில் அமெரிக்காவில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியின் போது அவரது தாய் ஆன் கான்சாஸ் மாகாணத்தில் பிறந்தார். அங்கிருந்து அமெரிக்காவின் பலபகுதிகளில் குடிபெயர்ந்து இறுதியாக சியாட் நகரில் பள்ளிக் கல்வியை முடித்து ஹவாய் வந்தடைந்த ஆன் சிகாகோ பல்கலைக்கழகத்தில் தன் படிப்பைத் தொடர்ந்தார். சிகாகோ பல்கலைக் கழகக் கல்விக் கூடத்தில்தான் ஆன் ஹுசேன் என்கிற பொருளாதாரக் கல்வி மாணவரைச் சந்திக்கிறார். முதல் சந்திப்பிலேயே ஒருவர் மீது ஒருவர் காதல் கொள்கிறார்கள். இவர்களின் இணைபிரியா காதல் திருமணத்தில் முடிந்தது.

சிறுபான்மையினத்துக்குச் சொந்தமான கருப்பினத்துக்காரரை காதலித்துக் கரம் பற்றுகிறார் வெள்ளை இனத்தைச் சேர்ந்த ஆன். முரட்டு, உயரமான ஹுசேன் மென்மையான ஆன்-ஐ மணக்கிறார். ஆன் சிகாகோவில் படிக்கவில்லையென்றால் அமெரிக்க வரலாறே

மாறியிருக்கும். இங்குதான் ஹுசேன் - ஆன் காதல் மலர்ந்தது. ஆம் கலப்புத் திருமணத்திற்கு தடை விதிக்கப்பட்டிருந்த நேரத்தில் சட்டத்தையும் மீறி, குடும்பத்தினரின் எதிர்ப்பையும் மீறி 18 வயதுடைய ஆன் 23 வயதடைந்த ஹுசேன் என்கிற கருப்பின இளைஞனை 1960ல் கரம்பிடித்தார்.

ஆன் - ஹுசேன் தங்கள் பிடிவாதக் காதலால் கரம் சேர்த்து இருவரும் 1961ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 4ம் நாள் ஒபாமாவை உலகிற்கு வழங்கினர். கருப்புத் தந்தைக்கும், வெள்ளைத் தாய்க்கும் மகனாகப் பிறந்த பாரக் ஹுசேன் ஒபாமாவின் வாழ்க்கைப் பயணங்களைக் காண்போம்.

ஒபாமாவின் தந்தை ஹுசேன் தனிமனித ஒழுக்கத்தில் பின் தங்கியே இருந்தார். ஒபாமா விபரம் அறிந்து நூலகங்களில் புத்தகங் களைப் படிக்க ஆரம்பித்த காலத்தில் ஒபாமாவின் தந்தையைப் பற்றி தவறான எண்ணங்கள் ஏற்பட்டு விடக்கூடாது என்றும், தந்தையின் கருப்பினம் ஒரு பெரும் வீரமிக்க சந்ததி என்றும் ஓகோ வெனப்புகழ்ந்து தன் மனதில் தகப்பனார் பற்றிய சிந்தனைகளைச் சிறிதும் குறைவின்றி தாய் சிறப்புடனே கூறியிருந்தாலும், சிறுவன் ஒபாமாவின் உள்ளத்தில் அந்த எண்ணம் வெகு விரைவில் கரைந்தது.

ஒபாமாவின் 2வது வயதில் தன் தகப்பனார் குடும்பத்தை விட்டுப் பிரிந்து விட்டார். அழகிய இளம் மனைவியை தவிக்க விட்டு சென்று விட்டார். தன் தந்தையைப் பற்றி தன் தாய் கூறியது அனைத்தும் மிகைப்படுத்தப்பட்டவை என்பதையும், தகப்பனாரின் இனம் வீரப்பரம்பரையல்ல என்றும் சாதாரண லூலோ எனப்படும் கீழ்மட்ட ஆப்பிரிக்க இனம் என்றும் அறிந்து கொண்டு தன்னுடைய “Dreams from my father” என்கிற சுயசரிதையில் உண்மையை உள்ளபடி எழுதியுள்ளார்.

ஆட்டு இடையனாகப் பிறந்தாலும் தன் தகப்பனார் தான் கற்ற கல்வியின் மூலம் தன் அறிவை வளர்த்துக் கொண்டு லண்டன், ஹவாய் போன்ற இடங்களிலெல்லாம் உயர்கல்வி கற்று நல்லறிவோடு

இருந்தாலும், உயர் பதவிகள் பல வகித்தாலும், தனி மனித ஒழுக்கம் அவருக்கு சவாலாகவே இருந்தது பற்றியும் ஒபாமா குறிப்பிடுகிறார். ஆப்பிரிக்காவில் லூலோ இனம் பற்றியும் அறிந்து கொண்டார் ஒபாமா. ஒபாமாவின் தகப்பனாருக்கு 4 மனைவிகள் 9 குழந்தைகள்; 2வது வயதில் தாயைப் பிரிந்து தன்னையும் பிரிந்த தகப்பனை மீண்டும் 10 வயதில் சந்திக்கும் ஒபாமா தன் தந்தை தன்னிடம் காட்டிய வெறுப்பு கலந்த அன்பையும், நடவடிக்கைகளையும், கண்டிப்பையும் கண்டு மீண்டும் தன் தகப்பனாரிடம் வெறுப்பும், கோபமும் கொள்கிறார். இவற்றையெல்லாம் வெள்ளையுள்ளத்துடன் dreams from my father என்கிற தன் சுய சரிதையில் குறிப்பிட்டுள்ளார். தந்தையின் வெற்றிடத்தை தன் தாயின் அன்பால் அரவணைப்பால் பெற்று நிறைவு செய்து, சுயமரியாதையுடன் சுடர்விடும் புத்திசாலித் தனத்தை தாய்வழி தாத்தா, பாட்டி மூலம் பெற்று வளர்ந்தார் ஒபாமா.

ஒபாமாவிடம் தந்தையை விட தன் தாயின் தாக்கம் அதிகமாகவே இருந்தது. இதே மன நிலையில்தான் அவர் தங்கை மாயாவும் இருந்துள்ளார். அவர் “சிறிய கிராமத்தில் என் தாய் குடியிருந்தாலும், பரந்த இனிமையான, சுதந்திர உள்ளத்தோடு வாழ்ந்தவர். யாருக்கும் தீங்கு நினைக்காத அன்புள்ளம் கொண்டு, கோபம் என்பதே அறியாதவர்” என்று கூறுகிறார்.

“She was very sweet and she was a little native and she was very liberal. She did not understand the anger she was such a woman”, Maya said.

தன் இளமைக் கால வாழ்விற்கு வலுவான வளமான வாழ்க்கையை அமைத்துக் கொடுத்த தன் அன்பு அன்னை 54வது வயதில் புற்று நோயால் காலமானார். ஒபாமாவை தன் தாயின் மறைவு வெகுவாகப் பாதித்தது. அமெரிக்க நாட்டின் அதிபர் மற்றும், உலக நாடுகளின் ஒப்பற்ற தலைவர் ஒபாமா என்பதைத் தன் கண்களால் பார்த்துப் பரவசம் அடையாத தன் தாயின் மறைவு அவருக்கு பெரும் இழப்புதான்.

தன் கணவரை விவாகரத்து செய்த ஆன் தனிமையான வாழ்விற்கும், தன் கவலைக்கும் முற்றுப்புள்ளி வைத்தார். அவரது அழகுக்கும் இளமைக்கும் வசதி படைத்தவர்கள் பலர் காத்திருந்தும், இந்தோனேசியாவைச் சேர்ந்த "**லொலொ செய்ட்டாரோ**" எனும் உயர் கல்வி கற்க வந்த ஹவாய் பல்கலைக் கழகத்தின் மாணவரைத் தான் மணந்து கொண்டு தன் மவுன வாழ்வுக்கு முற்றுப்புள்ளி வைத்து இந்தோனேசியாவில் தன் வாழ்வைத் தொடர்ந்தார். தன் மகன் ஒபாமாவுடன் இந்தோனேசியாவிற்குப் பயணித்தார்.

ஆறு வயதில் தன் தாய், வளர்ப்புத் தந்தை இவர்களுடன் இந்தோனேசியாவிற்குப் பயணித்த ஒபாமா, இந்தோனேசியா வாழ்வைப்பற்றி கூறுகையில் ''இந்தோனேசியாவில் இளந்தளிராக வளர்க்கப்பட்டேன். ஹவாய் குழந்தையாகவும், அமெரிக்க வெள்ளைக்காரனாகவும், ஆப்பிரிக்க கருப்பு நிறக் குழந்தையாகவும் பல பரிமாணங்களுடன் கலப்பு கலாச்சாரத்துடன் வளர்க்கப்பட்டேன் - I was raised as am Indonesian child and a Hawaian child and as a black and as a white child and so what I benefited from in a multipilicity cultures that all fed me'' எனக் கூறுகிறார்.

ஒபாமாவின் இந்தோனேசியா வாழ்க்கையும், சம்பவங்களும் ருசிகரமானதாகும். பன்முகக் கலாச்சாரத்தோடு இந்தோனேசியாவில் வாழ்ந்த அனுபவத்தைப் பற்றி 2004ம் ஆண்டு வானொலிப் பேட்டியில் மனம் திறந்து கூறுகிறார்.

தன்னுடைய தந்தை ஹுசேன் தன்னிடம் நடந்து கொண்ட முறையையும், தன்னுடைய (தாயின் 2வது கணவர்) வளர்ப்புத் தந்தை லொலொவின் கெடுபிடிகள் மற்றும் முரட்டுத்தனம் பற்றியும் தன் சுயசரிதையில் விரிவாக விளக்கியுள்ளார்.

உணவு அருந்துவதில் அசைவப் பிரியரான ஒபாமா ஊர்வன அத்தனையையும் சாப்பிட்டு ருசியுடன் ஒரு கை பார்த்துவிட்டார். (பாம்பு, பல்லி, நாய்க் கறி இப்படி பல) அவர் சாப்பிட்டவற்றில் வெட்டுக்கிளி வறுவல் மொறுமொறுவென கடித்துத் தின்பதில் உள்ள ருசியே தனி ருசிதான் என வெட்டுக்கிளி வறுவல் பற்றி ரசனையுடன்

கூறியுள்ளார். நெல் வயல்களில் சிறுவர்களோடு ஓடியாடி விளையாடியது, எருமை மாட்டின் மீது அமர்ந்து சுற்றி வருவது எனத் தன் விளையாட்டுப் பருவ வாழ்க்கையைக் கூட மறக்காமல் வானொலி பேட்டியிலும் தன் சுயசரிதையிலும் கூறியுள்ளார். விவரம் அறிந்தவுடன் இந்தோனேசியா வாழ்க்கை பற்றியும் கூறியுள்ளார். இந்தோனேசியா வாழ்வை அவ்வளவாக ஏற்கவில்லை.

இந்தோனேசியாவில் வறுமையில் வாடிக் கொண்டிருந்த மக்கள் ஒருபுறம், தங்கத் தட்டில் சோறு ஊட்டும் மக்கள் ஒருபுறம் என்ற நிலையில், வசதியற்ற குடும்பத்துக் குழந்தைகள் ஒருவேளை சோற்றுக்குக்கூட வழியில்லாமல் தவிப்பது ஒபாமாவின் இளகிய மனத்திற்குள் ஒருவித கிளர்ச்சியை உண்டாக்கியது.

இவருடைய மாற்றாந் தந்தை ஒபாமாவை கடுமையான உள்ளத்திற்கு மாற்றத் தக்க முயற்சியில் ஈடுபட்டார். அதாவது வசதியுள்ள பணக்காரன் ஒன்றுமில்லாத ஏழையின் நிலத்தை அபகரிக்கிறான்; அதே நிலத்தில் அவனை மாடுபோல் உழைக்கச் சொல்கிறான். பலமற்றவன் மனைவி அழகாக இருந்தால் பலம் உள்ளவன் அவளை அபகரித்துக் கொள்கிறான். நீ பலமுள்ளவனாக இருக்க விரும்புகிறாயா? அல்லது பலமில்லாதவனாக இருக்க விரும்புகிறாயா?'' என்று அவர் ஒபாமாவிடம் கேட்டார்.

"MEN Take advantage of weakness in other men. The Strong men takes the weakmen's land, He manks the weak man work in the fields, if the weak maw woman is pretty, the strong men will take her. Wich would you rather be?'' LOLO

ஆறு வயதைத் தாண்டிய ஒபாமா என்ன பதில் கூறியிருப்பார்? இப்படி கூறுவதையும், கேட்பதையும் வெறுத்த ஒபாமா "என்னை சுற்றிப் பின்னப்பட்டுள்ள வலையில் பாதுகாப்பு, அன்பு என்கிற வளையம் மெல்ல மெல்ல கழன்று வன்முறையெனும் கொடூரம் தலை தூக்குவதை உணர்ந்தேன்".

லொலொ (மாற்றாந்தந்தை) செய்த கொடூர அறிவுரைக்கு எதிராக தாய் ஆன் அன்பையும், நியாயத்தையும் நேர்மையையும்,

நீதியையும், சுதந்திரமான சிந்தனையுடன், சுதந்திரமாக செயல்படும் அறிவுரையும் வழங்கித் தன் மகனை வளர்த்தார். இந்தச் சூழலில் தான் தன் இரண்டாவது குழந்தையாக மகள் மாயாவைப் பெற்றெடுத்தார். தன் குழந்தைகள் இந்தோனேசியா கலாச்சாரத்தில் வளர்ந்தாலும் அமெரிக்காவில் வாழ்ந்த சாதாரண அந்தத் தாயுள்ளம் கடந்த காலத்தை நினைக்கத் தவறவில்லை. நல்லமுறையில் குழந்தைகளை வளர்க்க அந்த தாயுள்ளம் துடித்தது.

இந்தோனேசியாவில் முஸ்ஸீம் மற்றும் கிருத்துவப் பள்ளியில் ஆங்கில அறிவில் பின்தங்கிய நிலையில் இருந்த ஒபாமாவிற்கு விடிவதற்குள் எழுந்து மூன்று மணிநேரம் ஆங்கில பாடம் கற்பித்தாள் அந்த அன்புள்ளம் கொண்ட தாய். ஒபாமாவின் தாய் வழி பாட்டி அவ்வப்போது தொலைபேசியின் மூலம் தன் மகள், பேரன் பற்றி அடிக்கடி விசாரித்துக் கொள்வார். ஒபாமாவின் தாய் கற்றுக் கொடுத்த ஆங்கில அறிவு அவரின் எழுத்துப் பணியில் கைகொடுத்தது.

தாய் நீதியையும், நேர்மையையும், கற்றுத் தந்ததால் மாற்றாந் தந்தையின் தீவிர வழியில் ஒபாமா செல்லாமல் அமைதியான வழியைக் கடைப்பிடித்து அனைத்து சாதனைகளையும் செய்து முடித்தார்.

இந்தோனேசியாவின் வறுமையும், சூழ்நிலையும் ஒபாமாவின் தாயின் கவலையை அதிகரித்தது. ஒருமுறை ஒபாமா முள்வேலி ஒன்றிலிருந்து குதிக்கும் போது குதிக்காலில் ஏற்பட்ட காயத்தினால் ரத்தம் பீரிட்டுக் கிளம்பி நடக்க முடியாமல் தவித்தார். குழந்தையின் துடிப்பைக் கண்ட தாய் ஆன் உள்ளம் பதைபதைத்தது. தன் கணவர் லொலொவை நாடி மருத்துவமனைக்கு கூட்டிச் செல்லக் கூறினார். கெஞ்சினார். ஆனால் அந்த வெள்ளை உடம்புக்காரரின் உள்ளம் கருப்பு என்பதை அவர் கூறிய வார்த்தைகளின் மூலம் தெரிந்து கொண்டார், என்ன இருந்தாலும் வளர்ப்புத் தந்தைதானே! காலையில் பார்த்துக்கொள்ளலாம் என்கிற வார்த்தைதான் அது. தாயின் உள்ளம் அதுவரை தாங்குமா?

அக்கம் பக்கத்தார் உதவியுடன் வலியால் துடித்த ஒபாமாவை மருத்துவமனைக்கு அழைத்துக் கொண்டு சென்றார், அங்குள்ள

மருத்துவர்கள் சீட்டு விளையாடிக் கொண்டிருந்தனர். விளையாட்டு முடிந்த பிறகுதான் வருவோம் என கூறிவிட்டனர். கெஞ்சி கதறி தன் மகனை காப்பாற்றுங்கள் என அழுது புலம்பிய தாயை கண்டு ஒரு வழியாகப் பீரிட்டுக் கொட்டிய ரத்தத்தை நிறுத்தி 20 தையல் போட்டு சிகிச்சையை செய்தார்கள். அப்போது அவரது தாய் ஆன் ஒரு முடிவிற்கு வந்து வாழ்ந்தாலும், வீழ்ந்தாலும் அமெரிக்காவில்தான் என முடிவெடுத்தார். இத்துடன் இந்தோனேசிய வாழ்க்கை ஒபாமாவிற்கு முடிவுக்கு வந்தது. மேற்கண்ட சம்பவம் நடைபெறா விட்டால் அமெரிக்காவின் வரலாறே மாறியிருக்கும். ஆம், மீண்டும் ஒபாமா தன் தாய்வழி பாட்டி, தாத்தா வாழும் ஹவாய்க்கு வந்தார். அசத்தலோடு அமெரிக்க வாழ்க்கை மீண்டும் ஆரம்பமாயிற்று. இங்குதான் மார்ட்டின் லூதர்கிங் வாழ்க்கை வரலாற்றினை சொல்லிக் கொடுத்து ஒபாமாவை உன்னத இடத்திற்கு கொண்டு வந்த தாய் தன் 54வது வயதில் மறைந்தார்.

என்னதான் கற்றிருந்தாலும், எவ்வளவு அறிவாற்றல் இருந்தாலும் வெள்ளைக்காரத் தாய்க்கு மகனாகப் பிறந்தாலும், பிறப்பால் கருப்பன், நிறத்தால் கருப்பன், இனத்தால் கருப்பன், அமெரிக்க நாட்டின் அடிமை கருப்பன் - எங்கு பார்த்தாலும் கருப்பன். இதுதான் ஒபாமா அன்று கண்ட அமெரிக்கா. வெள்ளை நிறத்தாரின் ஆதிக்க வெறியை அந்தச் சிறுவயதில் கண்ட ஒபாமாவின் உள்ளத்தில் அது பசுமரத்தில் அடித்த ஆணியாகப் பதிந்தது.

ஹவாயிலுள்ள "புனேகோ" என்கிற பள்ளியில் படித்தார். 1841ல் தொடங்கப்பட்ட வரலாற்றுப் பின்னணி கொண்ட அந்தப் பள்ளியில் 90 சதவிகிதத்தினர் வெள்ளையர்கள். தன் தாய் வழி தாத்தா, பாட்டி குடியிருக்கும் பகுதிக்கு அருகில்தான் அந்த புனேகோ பள்ளி. புனேகோ பள்ளிக்குத் தன் பாட்டியுடன் சென்ற ஒபாமா பள்ளி அமைந்த இடம், அப்பள்ளிக் கட்டிடத்தின் எழில்மிகு தோற்றம், சுற்றுச் சுவரையொட்டி ஓங்கி வளர்ந்துள்ள பனைமரங்களின் உயர்ந்த நேர்த்தியான அழகு, அதையொட்டி அமைக்கப்பட்டுள்ள பூந்தோட்டம், கலை நிகழ்ச்சிக்கென கட்டப்பட்டுள்ள கலையரங்கம், அங்கு அமைக்கப்பட்டுள்ள கலை நுணுக்க வேலைப்பாடுகள், மொத்தத்தில் அந்தப் பள்ளி ஒரு சொர்க்கம் என்று அவரது பாட்டி கூறியதோடு

ஒபாமாவின் கல்வி வளர்ச்சிக்கும் ஒரு தூண்டுகோலாக அந்த புனேகோ பள்ளி அமைந்தது.

புனேகோ பள்ளியில் படிக்கும்போது வெள்ளையர்களின் ஆதிக்கத்தை உணர்ந்தார். அந்தப் பள்ளியில் படிக்கும்போது ரே என்கிற நண்பர் பள்ளித் தோழராக அறிமுகமானார். இவர் ஒபாமாவை விட வயதில் மூத்தவர். வாழ்க்கையில் பலவழிகளில் துன்பத்திற்கு ஆளானவர். வெள்ளை மாணவர்களும், மாணவிகளும் தம்மை மதிப்பதில்லை என ஒபாமாவிடம் புலம்பித் தள்ளினார். ஆனால் ஒபாமா இவரை சமாதானப்படுத்துவார். வெள்ளையர்கள் இன, நிற வெறிபிடித்தவர்கள் என கத்துவார். இதற்கு ஒபாமா பொறுமையாக வெள்ளையர்கள் தங்கள் ரத்த சம்பந்த சொந்த பந்தங்களுடன் அன்றாடம் பழகுபவர்கள். அவர்கள் எல்லோரும் வெள்ளையாக இருப்பதால் அவர்களுக்கு கருப்பாக இருக்கும் நம்மைக் கண்டால் பயமும், வெறுப்பும் வருவது இயல்புதான் எனக் கூறினாலும், அவர் ஏற்க மறுப்பார்.

தன்னுடைய உயர்நிலைப் பள்ளி படிப்பை முடிப்பதற்குள் ஒபாமாவும் அவரது நண்பர் ரே-வும் பல்வேறு துன்பங்களுக்கு ஆட்படுத்தப்பட்டனர். கூட்டங்களிலிருந்து தனித்து விடப்பட்டனர். வாலிபால் விளையாட்டு மைதானத்தில் அவமானப்படுத்தப்பட்டனர். நன்றாக விளையாடுவார்கள் ஆனால் ஒதுக்கப்படுவார்கள். நன்றாக படிப்பார்கள் ஆனால் தனிமைப்படுத்தப் படுவார்கள். காரணம் கருப்பினம். இப்படி தன் பொறுமைக்கு சவால் விடும் பல சந்தர்ப் பங்களிலும் தன் தாய் கற்று கொடுத்த பொறுமையை பொன்னெனக் கடைப்பிடித்ததால் பொறுப்பான பதவியில் அமர முடிந்தது. புனேகோ உயர் நிலைப்பள்ளியில் படிக்கும்போது ஒபாமாவின் தாய் இரண்டாவதாக மணமுடித்த லொலொ என்கிற இந்தோனேசியக் காரரை விவாகரத்து செய்ததுடன், இந்தோனேசியாவில் பாதியில் விட்டு வந்த ஆராய்ச்சி படிப்பு சம்மந்தமாக தன் மகள். மாயா, மகன் ஒபாமா இருவரையும் அழைத்துக் கொண்டு இந்தோனேசியா செல்ல திட்டமிட்டு ஒபாமாவை அழைத்தார். ஆனால் ஒபாமா தன் தாயுடன் செல்ல மறுத்துவிட்டார். தாத்தா பாட்டியுடன் இருக்கப் போவதாக கூறிவிட்டார்.

தன் தாய் இந்தோனேசியா புறப்படும்முன் ஒபாமா தாத்தா பாட்டியிடம் ஒழுங்காக படிப்பதாகவும், அவர் கூறியதற்கு எதிராக தான் எதிலும் ஈடுபடமாட்டேன் என்றும் உறுதிமொழி கொடுத்து - அதேபோல் தாத்தா பாட்டியுடன் தங்கி தன் கல்வியைத் தொடர்ந்தார். அமெரிக்க வாழ்வில் ஒருவித ஈர்ப்பு கொண்டார்.

1979-ல் கலிபோர்னியா மாநிலத்திலுள்ள லாஸ் ஏஞ்சலஸ்-ன் புகழ்பெற்ற "ஆக்சிடெண்டல்" கல்லூரியில் தன் இளங்கலைப் பட்டப்படிப்பைத் தொடர்ந்தார். அரசின் முழு உதவித் தொகையுடன் படித்தார். கருப்பாக இருந்தாலும் பார்ப்பதற்கு மிடுக்கான, உயரமான, எடுப்பான தோற்றமும், சிரித்த முகமும் இவருக்கு கவர்ச்சியாக இருந்தது. படிப்பதிலும், பேசுவதிலும், விளையாடுவதிலும் தனக்கென ஒரு வழி ஏற்படுத்தி தன்னுடைய பன்முகத் திறமைகளை பலவழிகளில் வெளிப்படுத்தினார். சிறந்த மாணவராக வலம் வந்தார்.

லாஸ் ஏஞ்சலஸ் வரும்முன் தன் தாத்தா பாட்டியுடன் ஹவாயிலுள்ள பேருந்து நிலையத்தில் நின்று கொண்டிருந்தபோது ஒரு பிச்சைக்கார கருப்பன் பிச்சை கேட்பதைக் கண்ட பாட்டி, தன் கருப்புப் பேரன் அருகில் நிற்பதைக்கூட நினைக்காமல் நிறத்தைப் பற்றிக் கூறி திட்டி விட்டார். இதுகண்ட தாத்தா "கருப்பன் என்பதால்தானே திட்டினாய்? இது கொஞ்சம் அதிகம்" எனக்கூறி கண்டித்தார். இதனைக் கேட்டுக் கொண்டிருந்த ஒபாமாவின் உள்ளம் மட்டுமல்லாமல் இரத்தமும் கொதித்தது. என்னசெய்வது? தன்னை அடக்கிக் கொண்டார். இப்படி எத்தனையோ முறை, எவ்வளவோ இடங்களில் ஏற்பட்ட அவமானச் சித்தரவதைகளைத் தாங்கி தன் பணிகளைத் தொடர்ந்தார். சிறு வயதில் "பேரி ஒபாமா" என்று வலம் வந்தார்.

கல்லூரியில் பேரி ஒபாமா என்ற இவர் பெயரின் விளக்கம் என்ன என்பது பற்றி பலர் பலவிதமாகக் கேள்விமேல் கேள்வி கேட்டனர். பாரக் என்றால் "கடவுள் அருள் பெற்றவன்" என்றும் ஹுசேன் தன் தாத்தா (முஸ்ஸீம்) பெயர் என்றும், விளக்கம் அளிக்கையில் பேரி என்பது பொதுப் பெயர் எனக்கூறினார். இதைக் கேட்ட ஒரு பெண் இனி உன்னை பாரக் என்றே அழைக்கட்டுமா

என்றார். அன்று முதல் பாரக், பாரக் என்றே அழைத்தனர். பாரக் ஒபாமா இப்பெயரை ஏற்றுக் கொண்டார். ஆக்சிடெண்டல் கல்லூரியில் மாணவர் வேலை நிறுத்தம், அதுவும் தன் இனத்தின் தலைவர் நெல்சன் மண்டேலாவின் கைதைக் கண்டித்து - விடுவாரா ஒபாமா? புரட்சி உள்ளம் கொண்டவராயிற்றே!

ஆக்சிடெண்டல் கல்லூரியில் நடந்த மாணவர் போராட்டத்தின் போது இவர் ஆற்றிய உரை அமெரிக்க மக்கள் இவரைத் திரும்பிப் பார்க்க வைத்தது. தன் புரட்சிகர உரையால் மாணவர்கள் உள்ளத்தில் குடிபுகுந்தார்.

எங்கெல்லாம் கருப்பின மக்கள் ஒதுக்கப்பட்டார்களோ எங்கெல் லாம் ஓரங்கட்டப்பட்டார்களோ, எங்கெல்லாம் எள்ளி நகையாடப்பட்டு ஏளனப் படுத்தப்பட்டார்களோ, நிறத்தால் கேவலப்படுத்தப்பட்டார்களோ, அங்கெல்லாம் அவரது உரை எழுச்சியை ஏற்படுத்தியது. மனிதாபிமானமற்ற முறையில் மிருகங்களைவிட கொடுமையாக நடத்தியவர்களை எதிர்த்தும் தன் இனத்தின் இழிநிலையைப் போக்கவும், மனிதனை மனிதன் அடிமைப்படுத்துவதைக் கண்டித்தும், ஒடுக்கப்பட்ட, அடக்கப்பட்ட மக்களின் குரலாக ஒலித்துக் கொண்டிருக்கும் கருப்பு சூரியன் நெல்சன் மண்டேலாவின் விடுதலைக் காக லாஸ் ஏஞ்சல்ஸ் ஆக்சிடெண்டல் கல்லூரி மாமன்றத்தில் ஒலித்த ஒபாமாவின் உரை, கல்லூரி மாமன்றத்தில் மட்டுமல்லாமல், அங்கிங்கெனாதபடி எங்கும் பேசப்பட்டது. கூட்டத்தில் இருப்போரின் உள்ளக் கிளர்ச்சிக்கேற்றார் போல், திறந்து விட்ட மடைவெள்ளம்போல், இவருக்கு வழிகாட்டிகளாகத் திகழ்ந்த ஜான்.எப்.கென்னடி, ஆப்ரகாம் லிங்கன், இவர்களின் சொற்பொழிவுகளைப் போல் தன் சொற் பொழிவுகளை அமைத்துக் கொண்டு வரலாற்று உண்மைகளையும், உவமைகளையும், தான் கற்று வைத்திருக்கும் விவரங்கள், இலக்கியங்களில் காணப்படும் கற்பனை வளங்கள் எதையும் விடாமல் எழுதி வைத்துப் படிக்கும் பழக்கம் இல்லா ஒபாமாவிடமிருந்து தங்கு தடையின்றி வந்து விழும் வார்த்தைகளை ரசிக்காதோர் இல்லை என்ற அளவிற்கு பேச்சாற்றல் கொண்டவர் ஒபாமா. கல்லூரி மாணவர் அனைவரின் பாராட்டுக்களை பெற்றார்.

மாணவர் பரிவார்த்தை மூலம் ஒபாமா கல்வி சம்பந்தமாக நியூயார்க்கில் உள்ள கொலம்பியா பல்கலைக்கழகத்தில் மீதமிருந்த இரண்டாண்டுகளையும் அங்கேயே தங்கிப் படிப்பதற்காக 1981ல் சென்றார். இவருடைய தாய் வழி தாத்தா, பாட்டி இருவரும் தன் பேரனின் படிப்பாற்றலைக் கண்டு வியந்தனர். அதாவது தங்கியிருந்த அறையில் ஒரு துண்டு இரண்டு தட்டும் டம்ளரும்தான். மற்றபடி அறை முழுவதும் புத்தங்கள்தான். புத்தகங்கள் அறிவுப் பசியைப் போக்கும் அட்சய பாத்திரங்களாகக் கருதி படித்துப்படித்து தன் வாசிப்புத் தன்மையை பன்மடங்கு உயர்த்திக் கொண்டார். கற்றனைத்தூறும் கல்வி அறிவு என்பதை அறிந்து கொண்டார்.

1987ல் சிகாகோ மாநகரின் முதல் மேயராக ஒரு கருப்பன் தேர்ந்தெடுக்கப்பட்டார். கருப்பின மக்களின் வாக்குகளை ஒன்று சேர்த்து ஹரால்டு வாஷிங்டன் என்பவர் ஜனநாயக கட்சியின் சார்பில் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். சிகாகோ ஜனநாயகக் கட்சியின் கோட்டை; கருப்பர்கள் அதிகம் வாழும் பகுதி. இவரை எதிர்த்துப் போட்டியிட்ட இருவரும் வெள்ளையர்கள்; நிறவெறி ஆதிக்கம் கொண்டவர்கள். மேயராகத் தேர்வு செய்யப்பட்ட ஹெரால்டு வாஷிங்டன் ஓராண்டிலேயே மரணமடைந்துவிட்டார். இவரது மரணம் ஒபாமாவை வெகுவாகப் பாதித்தது.

ஒபாமா இளங்கலைப்பட்டம் பெற்றபின் தான் வேலை செய்த பன்னாட்டு வணிக நிறுவனத்தில் தொடர்ந்து வேலை செய்யப் பிடிக்கவில்லை. சமுதாய ஒற்றுமை தழைக்க ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட மக்களின் சமூக நீதி காத்திடவும், சாலையோர சாக்கடையில் தூங்கியெழும் கருப்பின மக்களின் வாழ்வில் எழுச்சி ஏற்படுத்திடவும் பாடுபடவேண்டும் என்ற பொதுச் சேவையில் நாட்டம் கொண்டார் ஒபாமா. அதற்கான சிந்தனை செய்து தன்னுடைய வாழ்க்கைப் பாதையை சீர் செய்து கொண்டார்.

தான் கற்ற இளங்கலை பட்டப்படிப்போடு சட்டக் கல்வியும் முக்கிய மென்பதைத் தெரிந்து கொண்டு சட்டம் படிக்க எண்ணினார். சட்டம் படித்து வக்கீல் தொழில் செய்வது இவரது நோக்கமல்ல. மாறாகத் தான் பணி செய்ய விரும்பும் மக்களுக்கு சட்டத்தின் மூலம்

தாயிடம் தினமும் மூன்று மணிநேர ஆங்கிலப் படிப்பு பயிற்சியானது இவரது அனைத்துக் கல்விகளுக்கும் மூலதனமாக இருந்தது.

பல்வேறு மொழி பேசுபவர்கள், பலமாநிலத்தைச் சேர்ந்தவர்கள், பலநிறத்தவர்கள், பல்வேறு கலாச்சாரங்களுக்குச் சொந்தக்காரர்கள் எனப் பலதரப்பட்ட மாணவர்கள் படித்து வந்த ஹார்வேர்டு பல்கலைக்கழகத்தின் சட்டக்கல்லூரியில் ஒபாமாவின் பங்கு அளப்பரியது. இவர் பல ஊர்களில் படித்து, பழகியது, அனைத்துத் தரப்பு மாணவர்களுடன் பழகுவதற்கு எளிதாக இருந்தது. அங்கும் இவர் தன் கருப்பின மாணவர்களை சந்தித்து தன் இனத்தின் தாழ்ந்த நிலையையும், அதனை நீக்க மாபெரும் வாய்ப்புதான் சட்டக் கல்வி என்பதையும் எடுத்துக் கூறி பலதரப்பட்ட கொள்கைகளையுடையவர்களிடம் ஒபாமா நீக்குப்போக்கு நெளிவு சுளிவுடன் பழகியது, அவரது அரசியல் வாழ்வுக்கும், அதிபர் தேர்தலில் போட்டி போடும்போதும் பயனுடையதாக இருந்தது.

ஒருமுறை ஹார்வேர்டு பல்கலைக்கழகத்தில் படிப்பவர்களை எப்படி பெயரிட்டு அழைப்பது, அதாவது “ஆப்பிரிக்க கருப்பர்” என்றழைப்பதா? அல்லது ஆப்பிரிக்க அமெரிக்கக் கருப்பர் என அழைப்பதா? என ஒரு பெரும் விவாதம் நடந்தது. அதில் பலரும் பலவிதமான தங்களின் தாக்கத்தையும், கருத்துக்களையும் எடுத்து வைத்தனர். இறுதியில் ஒபாமா தன் வாதத் திறமையால் வென்று காட்டினார். “கருப்பர், நிக்கர், நீக்ரோ - இந்த வாதங்கள் வேகமாக வெடித்துக் கிளம்பும் இந்த பிரச்சனையில் நாம் அமெரிக்கக் கருப்பினம், ஆப்பிரிக்க கருப்பினம் என்றோ அழைத்துக் கொள்வதில் எந்த லாபமும் இல்லை. இந்த இனத்தின் இழிவு நிலையை நீக்க வேண்டும். கீழ்த்தட்டு மக்களின் ஏழ்மையை, வறுமையை, அறியாமையை நீக்க நாம் கல்வி கற்க வேண்டும். கற்ற கல்வியை மக்களிடம் சேர்க்க வேண்டும். கல்வியால் ஏற்படும் மாற்றத்தினால்தான் நாம் அவர்களை வாழவைக்க முடியும். ஒன்றுபட்ட மக்களுக்காக, ஒற்றுமையுடன் செயல்பட்டால்தான் ஒன்றுபட்ட அமெரிக்க நாட்டிற்கும் நாம் அவர்களின் சமூக நீதிக்கும் பாடுபடமுடியும்'' எனத் தன் வாதத்தை எடுத்து வைத்து அனைவரையும் திகைப்படையச் செய்தார். கல்விதான் அழிவற்ற செல்வம், அதற்கு நிகரான செல்வம் வேறில்லை